**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06-ஆம் நாள்**
**CC.151/2014**

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)ன் விதிமுறைகளின் படி பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் திரு.த.யுவராஜ் அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | V. வசந்த சுந்தரி (Assistant Director and Document Expert ) | வயது | : | 63 |
| க.பெ | : | T. விஜயகுமார் | நிலை | : | **PW-30 (LW-32 )** |

**A1 to A5 are present. Learned APP is present.**

**பட்டியல் சாட்சி 32-ஆன திருமதி.வசந்த சுந்தரி, மருத்துவ காரணங்களால் பயணம் செய்ய முடியாத சூழல் இருப்பதால் கோயம்புத்தூர் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் காணொலி காட்சி வாயிலாக முன்னிலையாகி சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்பட்டு, காணொலி வாயிலாக முன்னிலை ஆகிறாா்.**

**கு.வி.மு.ச பிரிவு 311 மனு தாக்கல் செய்யப்பட்டு Crl.M.P 266/2025 ஆனது அனுமதிக்கப்பட்டதின் பெயரில் சாட்சியம் அளிக்கிறாா்.**

**அரசு தரப்பில் முதன்மை விசாரணை -**

1) நான் 34 ஆண்டுகளாக தடய அறிவியல் துறையில் பணிபுரிந்து 02.09.2021-ஆம் ஆண்டு விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். நான் ஓய்வு பெறும்போது துணை இயக்குநர் பதவியில் இருந்தேன். நான் உதவி இயக்குநராக ஆவணப்பிரிவில் பணியில் இருந்தபோது 03-07-2014-ஆம் தேதி மாவட்ட குற்றப்பிரிவு காவல்நிலைய குற்ற எண்.306/2013 வழக்கிற்கான ஆவணங்கள் பரங்கிப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து திரு.பார்த்தசாரதி - தலைமை காவலர்-800 (கடலூர் மாவட்ட குற்றப்பிரிவு ) அவர்கள் மூலம் சீல் வைக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட கவரில் கொண்டுவரப்பட்டு எமது துறை ஆவண எண். 151/2014-கீழ் பெறப்பபட்டது. அவை எம்மால் கீழ்க்கண்டவாறு ஆய்வு செய்யப்பட்டது.

2) சர்ச்சைக்குரிய ஆவணங்களான 29-10-2013-ஆம் தேதியிட்ட Before the National Green tribunal என்று தலைப்பிட்ட புகைப்பட நகலில் இருந்த எண்கள் Q1 & Q2 எனவும் ஆங்கில வாசகங்கள் Q3 & Q4 எனவும் அதிலிருந்த சுருக்கெழுத்து Q5a எனவும் அதன்கீழிருந்த தேதி Q5b எனவும் குறியீடு செய்யப்பட்டது. 29.10.2013-ஆம் தேதியிட்ட District Revenue Officer – Cuddalore District அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்திலிருந்து சுருக்கெழுத்து Q6 & Q7 எனவும் கையால் எழுதப்பபட்ட எழுத்துக்கள் Q-8 எனவும் குறியீடு செய்யப்பட்டது. 29.10.2013-ஆம் தேதியிட்ட EWATT TELECOM & INTERNET BROWSING CENTRE NO.160, என்று தலைப்பிட்ட 5 தாள்கள் கொண்ட பிரெளவுசிங் செய்தவர்கள் பட்டியிலில் இருந்த கையெழுத்துக்கள் Q9 & Q10 என குறியீடு செய்யப்பட்டது.

3) அருளப்பராஜ் என்பவரிடமிருந்து சாட்சிகள் முன்பாக பெறப்பட்ட மாதிரி கையெழுத்துக்கள் S-1 முதல் S-31 வரை குறியீடு செய்யப்பட்டது. இவைகளை ஆய்வு செய்ததில் S-1 முதல் S-31 மற்றும் Q1 முதல் Q4, Q5b (புகைப்பட நகல்) மற்றும் Q6 முதல் Q10 வரை ஆகிய அனைத்தும் ஒரே நபரால் எழுதப்பட்டது என்று கருத்தும், சர்ச்சைக்குரிய ஆவணத்திலிருந்த Q5a குறித்து கருத்துவழங்க இயலாது என்று ஆவண அறிக்கை எண்.151/2014 மூலம் காரணத்தாள் இணைத்து நீதிமன்றத்திற்கு ஆவணங்களுடன் திருப்பி அனுப்பப்பட்டது. நான் வழங்கிய காரணத்தாள் உடன் கூடிய கருத்துரை **அ.சா.ஆ.86** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

***(1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வருகையின்மையின் காரணமாக, 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகள் தரப்பிற்கு எந்த பாதகமும் இன்றி, நீதியின் நலன்கருதி பரங்கிப்பேட்டை வட்ட சட்டப் பணிகள் குழுவின் பட்டியலில் உள்ள வழக்கறிஞரும், இவ்வழக்கின் 3 முதல் 5- ஆம் எதிரிகளின் வழக்கறிஞருமான திரு. K. ஜெயச்சந்திரன் அவர்கள் 1-ஆம் மற்றும் 2 ஆம் எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை செய்ய இந்நீதிமன்றத்தால் கோரப்பட்டு உரிய காலஅவகாசம் வழங்கப்பட்டது, அதன் அடிப்படையில் அவர் சாட்சியிடம் குறுக்கு விசாரணை செய்தார்.)***

**1 முதல் 5-ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - 03-07-2014-ல் பார்த்தசாரதி முத்திரையிடப்பட்ட ஒரு கவரை மட்டும்தான் என்னிடம் கொடுத்தாரா என்றால் ஆமாம். அதனுடன் வேறு கவர் எதையும் கொடுக்கவில்லையா என்றால் கொடுக்கவில்லை. Specimen Impression of Seal அடங்கிய ஓர் உரையினை கொடுத்தார்களா என்றால் Specimen Seal நீதிமன்ற கடிதத்திலேயே கொடுக்கப்பட்டது. Specimen Impression of Seal அடங்கிய கடிதத்தினை ஒப்பிட்ட பிறகுதான் ஆவணத்தின் உண்மை தன்மையினை அறியமுடியும் என்றாலும் நீதிமன்ற கடிதத்தில் உள்ள

Specimen Seal-யை வைத்து எப்படி அந்த ஆவணம் உண்மையானது என்று கருதினேன் என்றால் நீதிமன்ற கடிதத்தின் மூலமாகத்தான் Specimen Seal-யை நாங்கள் பெறுவது வழக்கம், தனியான கடித உரை மூலம் பெறுவது இல்லை. S-1 to S-31 Admitted Signature ஆனது Tamper செய்யப்பட்டது என்றால் சரியல்ல, சாட்சிகள் முன்னிலையில் விசாரணை அதிகாரியால் அது பெறப்பட்டது. Admitted Signature அருளப்பராஜ் என்பவரிடமிருந்து பெறப்பட்டவை அல்ல என்றால் அதுப்பற்றி என்னால் கருத்து கூற இயலாது.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஓம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**